# லெபனானில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில் 167 இலங்கையர் பலி; 30,000 பேர் பரிதவிப்பு

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 சித்திரை: 1 றம்ழான் பிறை: 17 இதழ்: 61
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 14-04-1990

(பெய்ரூட்)

லெபனானில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களிலும் மற்றும் பல்வேறு வகையிலும் 167 இலங்கையர்கள் மரணமடைந்துள்ளதாகவும், சுமார் 30,000 பேர் அங்கு பெரும் கஷ்ட நிலையை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனானில் வேலைவாய்ப்புகளைப் பெற்று இலங்கையிலி

(14-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை சந்திக்கச் சென்ற சமாதானக் குழு விபத்தில் சிக்கியது

### ஆசிரியர் பலி

(யாழ்ப்பாணம்)

பளையிலிருந்து ஜனாதிபதிக்கு சமாதானச் செய்தியை ஏந்திச் சென்ற சாரணர் குழு, நீர்கொழும்புக்கு அருகாமையில் விபத்தில் சிக்கியதில் ஆசிரியர் திரு. நாகமுத்து நற்குணம் என்பவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

வடமாகாணத்தில் பலஸ்தாபனங்களினதும், மதங்களினதும் சமாதானச் செய்தியை சேகரித்துக்கொண்டு, தமிழ்-

(14-ம்பக்கம் பார்க்க)

# பிரபாகரன் - ஹமீத் பேச்சுக்கள் சுமுக நிலையில் நடைபெற்றது


## விபரங்கள் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது

**தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் மேற்கொண்ட பேச்சுக்கள் சுமுக நிலையில் நடைபெற்றது. இப்பேச்சுக்கள் குறித்து இருதரப்பினரும் திருப்தி தெரிவித்துள்ளனர். இதன்விபரங்களை அமைச்சர் ஹமீத் நேற்றிரவு ஜனாதிபதிக்கு விளக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

தலைவர் திரு. வே. பிரபாகரனை நேற்றுக்காலை பத்து மணியளவில், நல்லூரில், வடக்கு கிழக்கு சாதானக்குழுவின் தலைவரும் நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்பு மூன்றரை மணித்தியால நேரம் நீடித்தது. இச்சந்திப்பின்போது அரசு தரப்பில் ஜனாப்.ஏ. ஸி. ஹமீத்தும் தமிழிழ விடுதலைப் புலிகள் தரப்பில் தலைவர் திரு. வே. பிரபாகரன் உட்பட விடுதலைப்புலிகள் முன்னணித்தலைவர் திரு. கோ. மகேந்திராசா (மாத்தையா) செயலாளர் திரு. யோகரத்தினம் (யோகி), அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம் யாழ். மாவட்ட இராணுவப் பொறுப்பாளர்

(14-ம் பக்கம் பார்க்க)



நல்லூரில் திரு. வே. பிரபாகரனும் அமைச்சர் ஜனாப் ஹமீத்தும் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். இப்படத்தில் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கமும், திரு. மாத்தயாவும், திரு. யோகரட்ணம் யோகியும் காணப்படுகின்றார்கள்.

## வடக்கு-கிழக்கு புனரமைப்பு 20 கோடி ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு பிரதேச புனரமைப்பிற்கென 20 கோடி ரூபாவை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இப்புனரமைப்புணிகள் வரவில ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடற்றொழில் மற்றும் விவசாயத்துறைகளை முன்னேற்றவும் சேதமடைந்த தொழிற்சாலைகளை திருத்தி உற்பத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கென இந்தப்பணம்

(14ம் பக்கம்பார்க்க)

## இந்திய-பாக் எல்லையில் மோதல்

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் ஒரு இந்திய வீரரும் 5 பாகிஸ்தானிய வீரர்களும் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(14ம் பக்கம் பார்க்க)



புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன், அமைச்சர் ஹமீத் ஆகியோருடன் திரு. மாத்தயா, திரு. யோகரட்ணம் யோகி, திரு. அன்ரன் பாலசிங்கம், திரு. டொமினிக், திரு. பானு ஆகியோர் காணப்படுகிறார்கள்.

வாசக நேயர்களுக்கு எமது

## புத்தாண்டு வாழ்த்துக்கள்!

(புத்தாண்டு மலர் உள்ளே)

## ஜே. வி. பி. நடவடிக்கை மீண்டும் தலைதூக்குகிறதா?

### பாதுகாப்பு வட்டாரங்களில் சந்தேகம்

(கொழும்பு)

தென்பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் கொலை, கொள்ளை சம்பவங்கள் மூலம் ஜே.வி.பி.யினரின் நடவடிக்கை மீண்டும் தலைதூக்கியுள்ளதாவென பாதுகாப்புவட்டாரங்களில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்

(14ம் பக்கம்பார்க்க

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயவிதை நாசிக் சிகப்பு ரகம். வியாபாரிகளுக்கு விசேட சலுகை வழங்கப்படும். கிலோ 375-00 படி கிடைக்கும். பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3720)

28 ஸ்ரீ 6243 இலக்கம் கொண்ட ட்ரக் ELF—350 விற்பனைக்குண்டு. தொடர்பு: ராணி மில், நெல்லியடி, அல்லது, அ. குமாரசுவாமி, 88, பலாலி ரோட், இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-3749)

### தேவை

யாழ். நகரிலுள்ள உல்லாசப் பயணிகள் விடுதி ஒன்றிற்கு Room Boy/Waiter மற்றும் Kitchen Helpers தேவை. முன் அனுபவம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 682 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(ஏ 682)

சமையற்காரர் (சைனீஸ் உணவு வகை மேல்நாட்டு, சீழ்நாட்டு உணவு தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள்) பரிமாறுபவர்கள் (அனுபவமுள்ளவர்கள்), காசாளர், சமையல் பகுதி உதவியாளர்கள் மற்றும் வேலை பழக விரும்புவோர் உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். கிரில் சைனீஸ் இன், இல: 181, பலாலி வீதி, கோண்டாவில். (மோட்டார் சைக்கிள் கராஜ் அருகாமை)

(சி-3746)


# "பாகிஸ்தான் அரசு நிலைமையைக் கட்டுப்படுத்தாவிட்டால் இராணுவம் மௌனமாக இருக்காது"

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மோசமடைந்து வரும் நிலைமையைக் கட்டுப்படுத்த அரசு தவறினால் இராணுவம் மௌனமாக இருக்காது என்று பாகிஸ்தான் இராணுவத்தலைவர் பிரதம மந்திரி திருமதி பெனசிர் பூட்டோவை எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாகிஸ்தானில் நடைபெற்ற இராணுவ தளபதிகள் மாநாட்டில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

உள்நாட்டு நிலைமையைக் கட்டுப்படுத்துவது அரசின் பொறுப்பாகும் என்றும் ஜனநாயகத்தில் உள்நாட்டு அமைதிச் சூழலைப் பராமரிப்பது அவசியமாகும் என்றும் அவர் கூறினார். (து)

## போராளிகள் ஞாபகார்த்த பரிசுகள்

(காங்கேசன் துறை)

மாவிட்டபுரம் பகுதி கிராம சேவகர் பிரிவுக்கான விளையாட்டுப் போட்டி ஆரம்பத்தில் புலிக்கொடி ஏற்றப்பட்டு, மக்கள் மரியாதை செலுத்தினார்கள்.

மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் அமைந்த மைதானத்தில் இடம்பெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் கடந்தகால சம்பவங்களில் மரணித்த போராளிகளுக்காகவும், பொதுமக்களுக்காகவும் 2 நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மேலும் இவ் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கப்பட்டது. வீர மரணமடைந்த போராளிகள் மதி, அசீஸ் ஞாபகார்த்தமாக பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (86)

## றமழான் சிந்தனை

### நாம் விதைத்ததே வளரும்

அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். "நாயகத் தோழர் ஒருவர் இறந்து விட்டார். சபையில் ஒருவர், அவரின் வெளி நிலைகளைக் கவனித்து, 'இவர் சுவர்க்கவாதி' எனக் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உமக்கு என்ன தெரியும்? அவர் வீண் பேச்சுப்பேசி இருக்கலாம். அல்லது அவர், தனக்கு எவ்வித நஷ்டமும் அளிக்காத வஸ்துவில் கஞ்சத்தனம் செய்திருக்கலாம் என்று கூறினார்கள்.

(நூல்:- திர்மிதி)

### நோன்பு தொழுகை நேர அட்டவணை

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4–28 |
| சுபஹ் | 4–43 |
| சூரிய உதயம் | 6–03 |
| லுஹர் | 12–20 |
| அஸர் | 3-18 |
| மரிஃப் | 6-19 |
| இஷா | 7-39 |

# "இளம் தலைமுறை பெண்கள் தலைமை தாங்கும் நிலை ஏற்படவேண்டும்"

(உடுவில்)

"ஒவ்வொரு நாட்டிலும் மகளிர் அணியினர் பொருத்தமான செயல்திட்டங்களைத் தெரிந்து அவற்றை அமுல்படுத்த முனைந்துவருகின்றனர். அரசாங்கத்தின் அணுகுமுறைகள் நமக்குக் கிடைககாத பட்சத்தில் கிராமிய மட்டத்தில் மகளிர் அபிவிருத்தியின் இலக்குகளை அடைய நாம் முயற்சிக்கவேண்டும்."

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மானிப்பாய் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தால் மெமோறியல் பாடசாலையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் இவ்வாறு கூறினார்.

கருத்தரங்கிற்கு திருமதி இ. துரைசிங்கம் தலைமை வகித்தார்.

திருமதி சரோஜா சிவச்சந்திரன் தொடர்ந்து கூறியதாவது:

வயதாகிய பிற்காலத்தில் தான் சமூகம் பெண்களுக்கு தலைமைப் பதவியை கொடுக்கின்றது. இந்நிலை மாறி இளம் தலைமுறைப்பெண்கள் தலைமை வகிக்கும் பதவிநிலை ஏற்படவேண்டும்.

ஆண் ஆதிக்கத்தின் அடிமைகளாக பெண்கள் விளங்கும் நிலையை நாம் மாற்றி ஆண்களுடன் சமத்துவ நிலையை ஏற்படுத்துவது பெண்களின் பணியாகும்.

வறுமை, கௌரவம், சுதந்திரம் ஆகிய தடைகள் பெண்களின் முன்னேற்றத்துக்கு தடையாக அமைந்துள்ளன, இம் மூன்று விடயத்தையும் அனுபவிக்க, அடையமுடியாதநிலையில் எம் முன்னேற்றத்துக்கு வழிபிறக்கமாட்டாது.

வீட்டுப் பணி புரியும் பெண்களுக்கு சம்பளம் தரப்படுவதில்லையாகையால் அத் தொழிலுக்கு பெறுமான அந்தஸ்து இல்லாது போய்விடுகிறது. நாம் இன்னொருவரில் தங்கி வாழும் நிலையிலிருந்து விடுபடவேண்டும்.

பிள்ளைகளுக்கு கல்வியறிவை யூட்டி அவர்களை உழைத்து வாழச் செய்யுங்கள். (109)

## நிவாரண உதவிகள்

(யாழ்ப்பாணம்)

எமது ஸ்தாபனம் புனர் வாழ்வுவேலையுடன், வன்செயலால் கணவனை இழந்த விதைவைகள், குடும்பத்தில் உணவு அளிப்பவரை இழந்தவர்கள், அங்கவீனர்கள், வன்செயலால் உடைமைகளை இழந்தவர்கள், தொழில் இழந்தவர்கள் வீடுகள் பாதிப்புற்றவர்கள் ஆகியோருக்கு நிவாரண உதவிகளைச் செய்துவருகின்றது.

இவ்வாறு 'உலக தரிசன'த்தின் கொழும்பு புனர் வாழ்வுப் பகுதியின் பொறுப்பாளர் திரு. நோயால் பேர்மன் புனித ரோக், புனித தோமை

(14-ம் பக்கம் பார்க்க)

## கைதடியில் எழுத்தாளர் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக் குழு நடத்தும் இளம் எழுத்தாளர் பயிற்சி நெறி இம்மாதம் 20, 21, 22ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கைதடி நவீல்ட் பாடசாலையில் மூன்று நாட்கள் நடைபெறும் இந்தப் பயிற்சி நெறியை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சி. மௌனகுரு நெறிப்படுத்தவுள்ளார்.

சுமார் 30 இளம் எழுத்தாளர் பயிற்சியாளர்கள் கலந்து கொள்ளும் இப்பயிற்சி வகுப்பில் ஈழத்தின் பிரபல்யமிக்க எழுத்தாளர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

இப்பயிற்சி நெறிக்கான ஏற்பாட்டினை அறவழிப்போராட்டக்குழுச் செயலாளர் க. ஜீவகதாஸ் செய்துவருகிறார். (து)


## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

எம்மால் ஏற்கனவே ஈழநாடு பத்திரிகையில் வெளியிடப்பெற்ற 08 - 04 - 1990 ந் திகதிய அறிவித்தலான 18 - 04 - 1990 பகிரங்க ஏலவிற்பனையோடு, 19 - 04 - 1990 ந் திகதியும்

எமது திணைக்கள மத்திய விநியோக நிலையத்தில் (P. S. சேவீஸ் ஸ்ரேசனுக்குள் அமைந்த கட்டடம் — ஸ்ரான்லிவீதி) மு. ப. 9-00 மணிக்கு இரும்புப் பெட்டி, சகலவிதமான தராசுகள், தளபாடங்கள் மற்றும் பொருட்கள் ஏலவிற்பனைக்கு விடப்படும். பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் 17 – 04 – 1990 ந் திகதி மு. ப. 9-00 மணிமுதல் பி. ப. 3-00 மணிவரை பார்வையிடலாம்.

250, கஸ்தூரியார்வீதி,
பிராந்தியக் காரியாலயம்,
விற்பனை அபிவிருத்தித் திணைக்களம்.
வடபிராந்தியம்,
யாழ்ப்பாணம்.

பிராந்தியக் கணக்காளர்,
வடபிராந்தியம்,
ஆணையாளருக்காக.

ஏ–0691

## தமிழ்ஈழத் தலைநகர் யாழிலோர் ஹனிப்கோ

இல்லத்தரசிகளுக்கான அனைத்துப் பொருட்களுடன்

வன்னி- ஸ்ரீசாயி ரேட்சென்றரினால் கருங்கல்லில் கைதேர்ந்த சிற்பக் கலைஞர்களால் கடையப்பெற்ற

★ ஆட்டுக்கல் ★ அம்மி ★ உரல்
★ திரிகை ★ ஹோட்டலுக்குரிய பெரிய அளவினலான (ஆட்டுக்கல்)

அனைத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

**HANIFCO**

**168, K. K. S. Road, Jaffna.**

(சி 3736)


## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழா நாளை 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை இரட்டாங்காலி ஸ்ரீ முருகன் ஆலய முன்றலில் நடைபெறும்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா, உள்ளூராட்சி அமைச்சு பணிப்பாளர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் திரு. சி. சடாச்சரசண்முகதாஸ், திரு. இ. பாலசிங்கம் வடகிழக்கு மாகாணசபை கமநலச் சேவையாளர் திரு. ப. க. பரமலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினராக பங்குபற்றும் இவ் விழா திரு. ப. க. மகாதேவா தலைமையில் நடைபெறும். (ம)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**விசுவநாதர் சின்னத்தம்பி முத்தையா**
(V. S. முத்தையா அன் சன்ஸ், அக்குரஸ்ஸ.)

கடந்த (17-3-90) இல் இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 15-4-90 ஞாயிற்றுக்கிழமை காலை கீரிமலையிலும், சபிண்டீகரணக் கிரியை மறுநாள் 16-4-90 திங்கள் காலை 10-00 மணிக்கு அவரது நாரந்தனை இல்லத்திலும் நடைபெற உள்ளன.

மேற்படி கிரியைகளுக்கு சமுகந்தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

"தேவகிரி"
நாரந்தனை, ஊர்காவற்றுறை.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

(சி 692)

## 42 வருடங்களின் பின்னர்

# தாயகம் திரும்ப இருந்த மன்னருக்கு ருமேனிய அரசாங்கம் அனுமதி மறுப்பு

(புகாரெஸ்ட்)

**ருமேனியாவில் 1947-ம் ஆண்டு நடந்த கொம்யூனிஸ்ட் புரட்சியினால் பதவி துறந்த நாடு கடத்தப்பட்ட மன்னர் மைக்கேல் 42 வருடங்களுக்குப் பின் தாயகம் திரும்ப முனைந்த போது அவருக்கு ருமேனியாவின் தற்போதைய அரசாங்கத்தினால் அனுமதி மறுக்கப்பட்டது.**

சுவிஸ்லாந்தில் தற்போது வசிக்கும் மன்னர் மைக்கேல் தான் ருமேனியா செல்ல இருப்பது தன் சொந்தப் பயணம் தான் என்று தெரிவித்துள்ளார்.

மன்னரின் இந்தப் பயணம் அரசியல் நோக்குடன் அமைந்துள்ளது என்று ருமேனிய அதிகாரிகள் கருதுகிறார்கள்.

மன்னர் மைக்கேல் அவரது மனைவி, மகள் ஆகியோர் சுவிஸ் விமான நிறுவனத்தின் ஒரு விமானம் மூலம் ருமேனியா செல்வதற்கான பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மன்னரின் இந்தப்பயணத்தையொட்டி ருமேனியாவில் பொதுக்கூட்டம் ஒன்றிற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பயணத்திற்கு விசா வழங்கப்படாத காரணத்தினால் சுவிஸ் விமானம் மன்னரையும் குடும்பத்தையும் ஏற்றிச் செல்வதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

மக்கள் விரும்பினால் தான் மன்னராக ஆட்சியேற்பதாக மன்னர் மைக்கேல் தெரிவித்துள்ளார்.

கடந்த 45 வருடங்களில் முதன் முதலாக நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்கள் தான் இருக்கின்றன.

இந்த நேரத்தில் மன்னரின் வருகை நாட்டில் பிரச்னைகளை உண்டாக்கும் என்றும் அப்படி நடக்குமேயானால் மன்னரின் பாதுகாப்பிற்கு தாங்கள் உத்தரவாதமளிக்க முடியாது என்றும் ருமேனிய அரசாங்கம் கருதுகிறது. (து)

### மனோதத்துவவியலாளர் ஆரம்ப மாநாடு

(தாஷ்கெந்த்)

உஸ்பெக் சோஷலிஸக் குடியரசின் தலைநகரில் மனோதத்துவ வியலாளர்களின் ஆரம்ப மாநாடு ஒன்று சமீபத்தில் நடைபெற்றது.

இந்த அங்குரார்பணக் கூட்டத்தில் சுமார் 1000 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சோவியத் யூனியனில் இன்று சுமார் 50,000 மனோதத்துவ நிபுணர்கள் இருப்பதாக அறியவந்துள்ளது.

செப்டெம்பர் - நவம்பர் மாதத்தில் சர்வதேச மட்டத்தில் ஒரு மாநாடு இடம் பெறவுள்ளதாகவும் அமைப்பு பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ... ... (து)

### மூன்று வருடங்களும் முதலிடம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவில் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த் தின விழாப் போட்டியில் இரண்டாம் பிரிவில் இசை தனிநிகழ்ச்சியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவியான செல்வி. சிவரஞ்சினி சிவசண்முகமூர்த்தி முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இப்போட்டி நடைபெற்றது. கடந்த மூன்று வருடங்களாக நடைபெற்ற தமிழ்த் தின போட்டிகளிலும் இவர் இதே இசை தனி நிகழ்ச்சியில் முதலிடத்தை பெற்றது குறிப்பிடத்தக்கது. (72)

## கிழக்கு பெய்ரூட் சண்டையில் 1000பேர்பலி;3000பேர்காயம்

(பெய்ரூட்)

1990 ஜனவரி 31-ம் திகதி முதல் கிழக்கு பெய்ரூட்டில் நடந்த தீவிர சண்டையில் சுமார் ஆயிரம் பேர் இறந்துள்ளதுடன் மூவாயிரம் பேர் காயமடைந்தனர். பத்துலட்சம் டாலர் மதிப்புள்ள பொருள்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சண்டைகளினால் பாதிக்கப்பட்ட லெபனான் மக்களுக்கு உடனடியாக உதவி வழங்க வேண்டும் என்று ஜெனீவாவிலுள்ள ஐ. நா. உதவிக்குழு அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (து)

### கர்ப்பப் பையிலிருந்த 40 கிலோகட்டி அகற்றப்பட்டது!

(காட்மண்டு)

நேபாள பெண்மணி ஒருவருடைய கர்ப்பப் பையிலிருந்து 40 கிலோ எடையுள்ள புற்று நோய்க் கட்டியொன்று அண்மையில் அறுவைச் சிகிச்சை மூலம் வெளியில் எடுக்கப்பட்டது.

பம்பாய் நகராட்சி மருத்துவ மனையொன்றில் கடந்தவாரம் ஆறு டாக்டர்கள் சுமார் 5 மணிநேரம் அறுவைச் சிகிச்சை செய்து இந்தக் கட்டியை வெற்றிகரமாக அகற்றியுள்ளார்கள்.

58 அங்குல நீளமும் 28 அங்குல அகலமும் கொண்ட இந்தக்கட்டி அகற்றப் பட்டதன் மூலம் இந்தப் பெண்மணிகாப்பாற்றப்பட்டு இப்போது சுகமாக உள்ளார். (து)

### இன்று வருடாந்த பொங்கல்

(தென்மராட்சி)

தென்மராட்சியைச் சேர்ந்த தனங்கிளப்பு அருள்மிகு அம்பாள் கோவிலில் இன்று பொங்கல் நடைபெற ஏற்பாடாயுள்ளது.

வாடிக்கையாளர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது புதுவருட
வாழ்த்துக்கள்
எஸ். ரி. மெடிக்கல்ஸ்
450, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## மலேசியாவில் விரைவில் தேர்தல் நடைபெறும்

(கோலாலம்பூர்)

மலேசியாவில் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதாக பிரதமர் டாக்டர் மகதூர் மொகமட் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடைபெறும் திகதி பற்றி அவர் கருத்து வெளியிடவில்லை.

கூட்டு அரசாங்கத்தில் இணைந்துள்ள கட்சிகள் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கத்தொடங்கியுள்ளன.

தேர்தல் தொகுதிகளில் பிரச்சார நடவடிக்கைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

1981-ம் ஆண்டிலிருந்து பிரதம மந்திரியாக இருந்து வரும் டாக்டர் மகதூர் மொகமட்டிற்கு பாராளுமன்றத்தில் போதியளவு பெரும்பான்மை செல்வாக்கு உள்ளது குறிப்பிடத்தக்கது. (து)

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது புதுவருட வாழ்த்துக்கள்
★ பிள்ளையார் ★
முற்றிலும் குளிரூட்டப்பட்ட
★ வர்ண தொலைக்காட்சிப் பெட்டி [T. V.] ★
பொருத்தப்பட்ட பஸ்
யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
தினசரி இரவு 7 மணி
கட்டணம்- ரூபா 150/-
ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்யுமிடம்:
பிள்ளையார் ஸ்ரோஸ்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T. Phone:-
வெள்ளவத்தை
தபாற்கந்தோர் அருகாமை
இல. 4 லில்லி அவெனியூ,
கொழும்பு.
T. Phone: 585188

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
()
விக்னு பார்மஸி
518, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### மணிவாக்கு

வாழ்வின் நியதியாக அன்பு அமையாது. இருந்தால் சாவின் மத்தியில் வாழ்வு தொடர்ந்து இருக்க முடியாது. — மகாத்மா காந்தி.

## நமது நோக்கு

### புத்தாண்டே வருக!

பிரமோதூத வருடம் பிறந்துவிட்டது. இலங்கையின் பிரதான சமூகங்களான பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் பொதுவான புத்தாண்டு மகிழ்ச்சித் திருநாளாக மலர்ந்திருக்கின்றது!

சித்திரைப் புத்தாண்டு நாள், வைகாசி விசாகம் போன்ற சில திருநாட்கள் இருபெரும் இனத்தவர்களுக்கும் பொதுநாட்களாக - புனித நாட்களாக — அமைந்துள்ளன. இவை ஒற்றுமைக்கும் புதிய சிந்தனைக்கும், சுபீட்ச வாழ்விற்கும் வழிவகுக்க வேண்டும்.

நடந்தவை பற்றி மறக்கவும், நடப்பவை பற்றிப் புதிய சிந்தனையோடு புதிய எதிர்பார்புகளோடு திட்டமிடவும் இன்று எல்லோரும் சங்கற்பம்செய்ய வேண்டியது அவசியம்,

புதிய நம்பிக்கைகளுக்கு, புதிய பொருளாதார வளர்ச்சிக்கு, புதிய சமுதாய வளர்ச்சிக்கு வித்திடும் நாளாகப் புத்தாண்டு அமையவேண்டும்!

பிரமோதூத வருஷ பலன் பாட்டு என்ன சொல்கிறது?

"...........................................வேந்தர்

நயமுண்டதாயிருப்பர் நன்கு!"

என்று பாட்டு தெம்பூட்டி முடிகிறது!

செங்கோல் சிறப்பாக அமைந்தால்தான் குடிமக்கள் சிறப்பாக வாழமுடியும் என்பது முன்னோர் கண்ட முடிபு.

இன்று செங்கோல் பிடிப்பவர்கள் யார்? செங்கோலைப் பிடிக்க வைப்பவர்கள் யார்? செங்கோல் கொடுங்கோலாக மாறுதிருக்கக் கண்டனங்களையும், நல்ல ஆலோசனைகளையும் வழங்குபவர்கள் யார்?

நாட்டு மக்களது அரசியலை வகுக்க உதவும் சகல அரசியற் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தலைவர்களும் பொதுநலத்தை முன்னிறுத்திச் சிந்திக்கத் தலைப்படவேண்டும். இதற்குப் புத்தாண்டுப் பண்டிகை புதுத் தெம்பை அளிக்கவேண்டும்.

தெற்கில், குறுகிய அரசியல் வட்டத்திற்குள் நின்று காலங்கடந்த தவறான சட்டங்களுக்குள் நின்று, தம் கட்சி; தம் மக்கள் என்ற சிந்தனையின் அடிப்படையில் செயற்பாடுகளைத் தொடர்ந்தால், போட்டியும் பொறாமையும் மலியும்; சிக்கல்களும் சீர்கேடுகளும் தலைதூக்கும்; ஊழலும், ஊதாரித்தனமும் ஊக்கமடைந்துவிடும்;

எனவே, புத்தாண்டுச் சிந்தனை புதியதோர் உலகம் அமைந்திட இந்நாட்டு மக்கள் அனைவரும் சிறந்திட புது மலர்ச்சி பெற்றிட வழி அமைக்கும் என நம்புவோமாக!

உ

முருகன் துணை

### பிரமோதூத புத்தாண்டே!

நல்ல பிரமோதூத நாமங்கொள் புத்தாண்டே!
நல்லபலன் செய்குவையே நாடோறும்- அல்லலுறும்
எங்கள் தமிழ்மக்கள் எல்லாரு மேசேர்ந்து
துங்கமுடன் வாழத் தொடர்ந்து

—கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

பெரிய சனி நற்சிந்தனை

### ஆதவன் மறைவான் தானே!

விந்தையில் விந்தை! அந்த
விஜயனு தோற்றுப் போனுன்?
மந்தையின் நடுவே வந்தும்
மன்னரைக் கலங்க வைத்தான்;
அந்தகர் காணப் பார்வை
அருளினேன்; லாசருக்கும்
தந்தனன் உயிரை! பின், ஏன்
தான், உயிர்விட்டான் அண்ணே!

ஆதவன் மறைவான் தானே!
அடுத்தநாட் காலைமட்டும்
தீதவன்—இருளின் ஆட்சி!
தீமையை மாய்க்க வந்த
வேதநாயகனும் நாளை
விஜயனுய் உயிர்க்கும் காலை
பாதகம் பட்டுப்போகும்
பகல்ஒளி செய்வான் யேசு!

—அல்லைப்பிட்டி அந்தோனிப் பண்டிதர்

இன்று தேர்த் திருவிழா

# அத்தியடியிலே நர்த்தனம் புரிகின்றுர் - விநாயகர்

மணிநிகர் யாழ். நகரின் வண். கிழக்குத் திசையினிலே, அத்தியடி என்னும் சைவத் துறையிலே பழைமையும், புதுமையும், பெருமையும் குன்றுது - ஆன்மாக்களின் 'அறிவு வளர்ச்சி'க்குத் தூண்டாமணி விளக்காய், அற்புதப் பஞ்சமுக நர்த்தன விநாயகப் பெருமான் - ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்திப்பிள்ளையார் கோவிலிலேயே அருளாட்சி புரிகின்றுர். அவரின் அருளாட்சியிலே அவ்வூர் மக்களின் அகங்குளிர்கின்றது; தொல்வினைகள் தீருகின்றன; இஷ்ட சித்திகள் நிறைகின்றன.

இத்தலத்தில், இன்று இரதத்தில் இறைவன் வீதியுலா வருகின்றுர். பஞ்சமுக விநாயகப்பெருமானுய், கடந்த விபவ புத்தாண்டில் முதற் தடவையாகப் பஞ்சமுக விநாயகர் இரதத்திலே வருகை தந்தார். இம்முறை பிரமோதூத ஆண்டில் இரண்டாவது தடவையாக அழகொழுக வரும் அற்புதக் காட்சி நிகழ்கின்றுர்.

விநாயகப் பெருமான் பரமேஸ்வரவடிவத்தை கொண்டபோது, பஞ்சமுக விநாயக மூர்த்தத்தைக் கொண்டருளினுர். சித்திரையில் சித்திரத் தேர் ஏறும் பஞ்சமுக விநாயகனைக் கண்டு தரிசிக்க, ஈழத்தின் சைவக் குடிகள் ஒன்று கூடும் காட்சி, காண்பதற்கு அரிய ஒன்று.

வருடப் பிறப்பின்போது, அழகிய சித்திரத் தேரிலே, பஞ்சவர்ண மூர்த்தியாய் ஆரோகணித்து வருகின்ற காட்சியைப் பார்ப்பதற்கு என்னே புண்ணியங்களை இந்த நெஞ்சம் செய்திருக்கவேண்டும்?

ஆணவ இருளகற்றும் உக்கிர அழகும், அன்பர்க்கருள் வழங்கும் சௌந்தர்ய அழகும் இணைந்து விளங்கும் விநாயகப் பெருமான், அழகிய மலர் மாலைகளும், ஆடை ஆபரணங்களும் அணிந்து, வெள்ளிப் பீடத்தில் இராஜாதி இராஜனுய் இனிதமர்ந்து, மணம் பரப்பும் மலர் மாலைகள் ஆட, குழைகள் சேர் மகரகுண்டலமாட, மார்பினில் முப்புரி நூலுடன் பதக்கங்கள் ஆட, நெற்றியில் சுட்டிகள் ஆட, கால்களில் சதங்கையாட, கொண்டாடும் அடியார்கள் சுற்றிச் சுழன்றுட, ஆடி ஆடி, அசைந்து அசைந்து உள்வீதி உலாவருவதும்; சிரமேற் கை கூப்பி, கண்ணீர் மல்கி, துதி பாடி, இடிபட்டு ஏங்கிநிற்கும் அடியார்களின் 'அவஸ்தை'களைப் பார்த்தவாறேசிதறுதேங்காய்கள் முட்டி மோத சித்திரத்தேரேறி அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றுர்.

பின்னர், பச்சை சார்த்தி நடைபெறும் அர்ச்சனைகளையும், அப்பொலிவோடு பஞ்சமுகவிநாயகர் தேரடியிலிருந்து ஆலயத்துள் திரும்பும் காட்சியும் பார்ப்போர் நெஞ்சங்களை நெகிழ வைப்பதாகும்.

விநாயகப் பெருமான்-பஞ்சமுகத்துடன்-அருள்மிகு ஸ்ரீ நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவிலினுள் நாதஸ்வர கானம் ஆர்ப்பரிக்க, மீண்டு கொண்டிருக்கும் காட்சி-இதயத்துள் பொங்கிப் பிரவகித்த இன்ப உணர்வையும் மீறி, எல்லாம்வல்ல இறையுணர்வை அபூர்வ சக்தியை வெளிக்கொணர்கிறது என்றால் வியப்பொன்றும் இல்லை.

— சத்தியன்

## வருஷ பலன்

### திருக்கணிதம்:

உலக நாடுகளிற் சமாதானம், முன்னேற்றம், முற்போக்குச் செயற்பாடுகள் முதலியவற்றில் கவனம் செலுத்தப்படும்.

இலங்கையில் அரசியல் நிலைமை ஓரளவு திருத்தத்தையடையும். பொருளாதாரம், வருவாய் என்பன அதிகரிக்கும். புனர் நிர்மாண வேலைகள் ஊக்கமாக நடக்கும். கைத்தொழில், வியாபாரம், கட்டிட நிர்மாணம், விவசாயத் திட்டங்கள் முதலியன குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெறும். போக்குவரத்து வசதிகள் அதிகமாகும். கல்வித்துறை, சமய வழிபாடுகள், விழாக்கள் என்பன சிறப்படையும். மழைக் குறைவால் கதிர்த் தானியங்கள் விருத்தி குன்றும்.

### வாக்கிய பஞ்சாங்கம்:

சம மழை, பூச்சிகளால் தொல்லை, கல்விக்குழப்பம், அக்கினி ஆயுதங்களால் அழிவு, வெளி நாட்டுத் தொடர்பு சீர்குலைதல், பணவீக்கம், வேலையாட்கள் உரிமை கேட்டல், உள்நாட்டு மோதல், சமயப் பிரசாரம் அதிகரித்தல், காற்றினுற் குழப்பம், பெண்கள், அந்தணர் சுகமடைதல், வாகன விபத்துக்கள் என்பன உண்டாம்.

யாவற்றையும் சீர்தூக்கிக் கண்ட நற்பலன் இரண்டு பங்கு, தீப்பலன் ஒரு பங்குமாம்.

நல்லை ஆதீன முதல்வரின்

### புத்தாண்டு வாழ்த்துக்கள்

பிரமோதூதப் புத்தாண்டு இந்நாட்டு மக்களுக்கு மங்களகரமாக அமைய வேண்டும். ஏறத்தாழ ஏழு வருடங்கள் இடருற்றுத் துன்புற்று உழன்ற மக்களுக்கு ஒளிமயமான வாழ்வு - நலம் தென்படுகிறது. இன்பமே எந்நாளும் துன்பமில்லை என எவ்வுயிரும் நாடி நுகர விரும்புவது இன்பமே. சிவன் - சங்கரன் இன்பம் அளிப்பவன் என்பது கருத்து. அவனை நாம் மறந்திருந்ததின் விளைவே எமக்குக் கிடைத்த தண்டனை. அசைக்க முடியாத இறைபக்தி வேண்டுமெனில் இதுவும் வேண்டும். தங்கம், பலதரம் பட்டையில் அடிபட்ட பின்னர்தான் அழகான ஆபரணங்கள் ஆகின்றது.

இப்புத்தாண்டில் மட்டுமல்ல எஞ்ஞான்றும் இந்நாட்டு மக்கள் தெய்வ நம்பிக்கை, அயராமுயற்சி ஒத்துழைப்பு பரோபகார சிந்தனை, ஒற்றுமை, ஒத்துழைப்பு ஆகிய உயர்பண்புகளை கைக்கொண்டு இன்புற்றுச் சீரோடும், சிறப்போடும் நலமே நீடு வாழ வேண்டுமென எல்லாம்வல்ல பரம் பொருளை மன, மொழி, மெய்களால் உழுத்தி எமது உளமார்ந்த நல்லாசிகளை எல்லோருக்கும் வழங்குகிறோம்.

— ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்

## பலதும் பத்தும்

### புத்தாண்டு

சூரியபகவான் மேடராசிக்குள் இன்று பிரவேசிக்கின்றுர்; வசந்தகாலம் ஆரம்பிக்கின்றது.

தைத்திருநாளில் சூரியன் மகர ராசிக்குள் பிரவேசிப்பதும் இவ்வாறு முக்கியத்துவம் பெறும் தினம்.

குறிப்பாக உழவர் பெருமக்களுக்கு சூரியன் முக்கியமான பலன்களைச் செய்து வருவதால், தெய்வமாகப் போற்றி வந்திருக்கிறுர்கள்.

சூரியனுக்குத் தமிழர்கள் மாத்திரமல்ல, தென்னமரிக்கா போன்ற வேறுபல நாடுகளிலும் கோவில் அமைத்து வழிபட்டு வந்துள்ளார்கள்.

சிலப்பதிகாரத்தில், கடவுள் வாழ்த்தாகா 'ஞாயிறு போற்றுதும் ...'' என்றிருக்கிறுர் இளங்கோ அடிகள்!

சூரியன் மேடத்திற்குள் புகுமுன் உள்ள நேரம், விசேடமானதல்ல, நற்காரியங்களுக்கு.

எனவேதான் முன்னையோர், வருடம் பிறந்தபின் விருந்துச்குப்போதல், கைவிசேஷம் பெறல் போன்றவற்றிற்கெல்லாம் நல்ல நேரத்தை வகுத்தார்கள்; பஞ்சாங்கம் வழிகாட்டுகின்றது.

விஷு புண்ணிய காலம் மேடத்திற்குள் சூரியன் செல்லும் காலம்; இந்த நேரம் கடவுள் வழிபாட்டுக்குரியது.

வாணி

## கைவிசேட நேரம்

### வாக்கியம்

சித்திரை—1— சனி பகல் 6.11—7.49
சித்திரை—3— திங்கள் பகல் 9 56—11.54
சித்திரை—3— திங்கள் பகல் 2.14—3.03

### திருக்கணிதம்

சித்திரை—1— சனி காலை 8.04—8.52
இரவு 6.28—7.40
சித்திரை—2— ஞாயிறு இரவு 6.28—7.40

## மருதடியானே!

திருவுங் கலையுஞ் சேர்ந்தொளிரும்
தேசுறும் மானிப் பாயூர்சேர்
மருதடி யனே தேரேறி
வந்தெமக் கருளைத் தருவாயே

—முருகசூரியன்

# புதுவருடப் பிறப்பு பற்றிய

# தத்துவார்த்தம்

மனிதப் பிறவியெடுத்த நாம், எமது உடல் வாழ்வைப் பாழாக வாழ்ந்து, தாள்வான வையே செய்து, பிறவிப் பயனை அடையாது வீணில் உளலாமல் ஒளி மயமான உத்தமனைக் காணமுயலும் ஆண்டில் ஓர் நன்னாளே, புது வருட தினமாம். எமது உள்ளத்தில் ஒளியைப் பிரகாசிக்கச் செய்து, ஆன்மாவில் இன்புறுவதற்கு, எம் வசமுள்ள அசுர குணங்களே பகைவராம். அவைகளைச் சுட்டுப் பொசுக்கினாலன்றி, ஒளி பிரகாசிக்காது. எனவே தான், புனித வாழ்வை ஆரம்பிக்கும் அப்புனித தினம், பிறக்கும் நேரமே, ஆகாதனவைச் சுட்டுப் பொசுக்கும் அர்த்தமாகவே, வெடிகளைக் கொளுத்துகிறோம். மனம்போன போக்கில் ஆசாரமின்றி உண்டு களித்திராமல், இறை நீதிக்கேற்ப புனித நீராடி, புனிதமுடன் வழிபாடு செய்து, புனிதமுடன் பொங்கி, உற்றார்,



உறவினருடன் பகிர்ந்துண்டு பழகுகிறோம். இறைவனிடம் மெய்யடிமை பூண்ட நல்லவர்களை நாடுகிறோம். கண்டு வணங்குகின்றோம். அன்பு பரிமாறுகிறோம். அன்பின் அடையாளமாக அவர்கள் எமக்கிடும் விபூதிப் பிரசாதம் பெற்று மகிழ்கிறோம், அவர்களின் அமுத வாக்கும் எமக்குக் கிட்டுகிறது. நல்லார் சொல் கேட்பதன் மூலம், நாமும் நல்வழிப்படுவோம். அவர்களுடன் இணக்கமறிந்து இணங்கியிருப்போமாயின், அவர்கள் அனுபவிக்கும் பேரின்ப சுகத்தில் நாமும் இணைந்து திளைத்திருப்போம்.

அருள்மிகு சிவமுனியடிகள்
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

---

## ★ புத்தாண்டே வம்மின் ★

புத்தாண்டே புத்தாண்டே
பிரமோதூத புத்தாண்டே
சித்தாண்ட கடத்தல் கப்பம்
கடைத்தல் கழைந்த
விர்தான வித்துவான்கள்
விருதுபெறும் புத்தாண்டே
எத்தாண்டும் எதிர்கொள்ள
எம்மிறையோடு வம்மின் வம்மின்

— ரிசிகோசவ ஜீ. ஜீ. லக்ஷ்மிநாராயண சுவாமிஜீ

---

## விளக்கை நாம் கொளுத்த வேண்டும்

சித்திரை பிறப்பதாலே
செந்தமிழ் நாட்டில் உள்ள
பத்திரிகைக் காரர்கள்
பாட்டுகள் தேடிப் போட்டுப்
புத்திதழ் அடிககின்றார்கள்
புதுமையின் பொருட்டாய் நாங்கள்
எத்தனை முயற்சி செய்வோம்!
எதிலுமே அழகு காண்போம்

குப்பைகள் கொளுத்த வேண்டும்
கூளங்கள் எரிக்க வேண்டும்
செத்தைகள் அடைக்க வேண்டும்
தீந்தைகள் அடிக்க வேண்டும்
சிப்பியைப் பிரித்து
முத்தைத்
தேடி நாம் எடுக்க வேண்டும்
இத்தனை செய்கைக்கும் மேல்
இதயங்கள் திறக்க வேண்டும்

அழுக்குகள் கழுவ வேண்டும்
அசுத்தங்கள் ஒழிய வேண்டும்
ஒழுக்குகள் அடைக்க வேண்டும்
ஒழுக்கங்கள் தடைப்படாமல்
முழுப்படியான, தூய
முயற்சிகள் நடக்க வேண்டும்
எழுச்சியின் நெறியில் அன்றோ
இதயங்கள் திறக்க வேண்டும்!

இதயங்கள் திறக்குமானால்
ஈனங்கள் இறக்கும் அன்றோ?
உதயங்கள் கோடி கோடி
ஒளி தந்து சிறக்கும் அன்றோ?

"விதி எங்கள் கையில்" என்று
விளக்கை நாம் கொளுத்தி விட்டால்
'புதிதெங்கள் கதி' என்கின்ற
புத்தகம் வெளியாகாதோ?

— முருகையன்

---


புதுவருட வாழ்த்துக்கள்

நிடித்த பாவனைக்கு

'சங்குமார்க்'

எவர்சில்வர் பாத்திரங்களையே பாவியுங்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் யாவருக்கும்

புதுவருட வாழ்த்துக்கள்

● தொலைக்காட்சி பெட்டி (T. V.)
● ரேடியோ
● ரேடியோ உதிரிப்பாகங்கள்
● மணிக்கூட்டு வகைகள்
● மின்விசிறிகள்

★ மின்சார உபகரணங்கள்
★ அன்ரனா பூஸ்ரர்கள் விற்பனைக்குண்டு
★ சிறந்த முறையில் அன்ரனா பொருத்திக் கொடுக்கப்படும்

நியூ சிற்றி ரேட்ஸ்

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எமது புதுவருட வாழ்த்துக்கள்

0 திருமண, பிறந்ததின விழா அழைப்பிதழ்கள்
0 பாடசாலை, காரியாலய உபகரணங்கள்
0 மின்சார உபகரணங்கள்
0 அலங்காரப் பொருட்கள்
0 அன்பளிப்புப் பொருட்கள்

★ தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

எமது புதுவருட வாழ்த்துக்கள்

()

நவநாகரிக புடவை வகைகளுக்கு விஜயம் செய்யுங்கள்

()

விக்னேஸ் ரெக்ஸ்

45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ புதுவருட வாழ்த்துக்கள் ★

எம்மிடம்

செறமிக்ஸ் (CERAMIC WARES),
எஸ்-லோன் பைப்கள் (S-Lon Pipes)

அதன் இணைப்பு வகைகள் ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

யுனிக்கோ செறமிக்ஸ் சென்றர்

UNICO CERAMICS CENTRE

2 - 1/2, ஸ்ரான்லி வீதி : யாழ்ப்பாணம்.

எமது மக்களின் ஆரோக்கிய வாழ்வில்
25 வருட சேவையைப் பூர்த்திசெய்யும் இவ்வேளையில்
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு

எமது புதுவருட
வாழ்த்துக்கள்!

பரணி மருந்துச்சாலை
456, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

## மருதடி விநாயகர் இன்று தேரேறி
# அருளும் புனித நாள்!

திருமதி காவேரி யோகநாதன்

மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றும் ஒருங்கே அமைந்தால் ஓர் ஆலயத்திற்குச் சிறப்பாகும். மூர்த்தி - விநாயகர், தலம் - மருது, தீர்த்தம் - அமிர்தபுஷ்கரணி. இவை அமைந்த இடம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம். சில ஊர்களுக்கு அந்தந்த இடத்தின் ஆலயத்தால் பெருமை. உதாரணமாக, இந்தியாவில் மதுரை என்றால் மீனாட்சி, சிதம்பரம் என்றால் நடராஜர். அதேபோல மானிப்பாய் என்றால் மருதடி விநாயகர். தனக்கு மேல் நாயகன் இல்லாதவன் விநாயகன், பூத கணங்களுக்கு அதிபதி கணபதி, 'சத்'தும், 'சித்'தும் கூடிய காலத்தில் ஆனந்தம். சத் சிவம். சிவம் சக்தி. இந்த ஆனந்தமூர்த்தியே கணபதி. சாதாரணமாக ஆனந்தம் நீடித்து நிலைக்காது. இது அழியாமல் இருக்க வே 'சத்' அறிவோடுகூடிய நிரந்தர ஆனந்தமே சச்சிதானந்தம். ஆனந்தம் வேண்டுபவர் விநாயகரை வழிபட வேண்டும். விநாயகர் வீற்றிருக்கும் இடம் ஆனந்தபுவனம். அவனின் உருவமோ ஓங்கார வடிவம், ஒருமைப்பாடு என்ற உயர்ந்த உட்பொருட் தத்துவத்தை விளக்குவதே இந்த ஓங்கார வடிவம்.

வாழ்க்கைக்கு ஆண் - பெண் இணைப்பு அவசியம். விநாயக மூர்த்தம் இதனை உணர்த்துகிறது. தந்தமுள்ள பகுதி ஆண் கூறு. தந்தமற்ற பகுதி பெண் கூறு. மேலும் புலால் மறுத்தலின் அவசியத்தையும், சைவ உணவின் மேன்மையையும் யானைமுகம் குறிப்பால் உணர்த்துகிறது. அளவிடற்கரிய சக்தியுள்ள யானை உண்பது தாவர உணவுதான். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் ஒரு குறைவுமில்லாமல் நடைபெறவேண்டுமென்பதைக் கணபதியின் ஐந்து கரங்கள் குறிக்கின்றன. இவர் ஆனந்தமயமானவர். ஞானமே வடிவானவர். இவருக்கு அருகம் புல் மிக உகந்தது. அருகு ஒரு இடத்தில் முளைத்து ஆறிடத்தில் கிளைக்கும் தன்மையுடையது. 'அருகு போல் வேரூன்றி' என்பது பழமொழி. இந்த அருகை அர்ச்

(8-ம் பக்கம் பார்க்க)

### வருவாய் மலராய் கணபதியே...!

எடுப்பு

அருள்வாய் அருள்வாய் கணபதியே!
அருள் தந்து அருள்வாய் கணபதியே-என்றும்
(அருள்...)

தொடுப்பு

குருவாய் வருவாய் கணபதியே - என்றும்
வருவாய் மலராய் கணபதியே - நீயே
(அருள்...)

முடிப்பு

பொறுத்திடும் எமக்கு நீதானே - தினம்
அறுத்திடும் எமது சஞ்சலங்களை
விழித்தெழுந்து அருள்புரிவாய் - என்றும்
குருவாய் வந்து அருள்புரிவாய் - கணபதியே
(அருள்...)

— சி. யசோதரன்

சிந்தை மகிழ்ந்திட சித்திரை வந்தாள்

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

குணம்
வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

"யாழ்நகரில் ஓர் வீடியோ நூலகம்"

ஆம்... வாலிப உள்ளங்களை மட்டுமல்ல வயோதிப உள்ளங்களையும் வயது
வரம்பின்றி கொள்ளைகொள்ளும் வண்ணம் புதிய, பழைய
திரைப்படங்களின் வீடியோ பிரதிகளை எண்ணம்போல்
தெரிவுசெய்து மகிழ்ந்திட

குணம் வீடியோ சென்ரர்
வீடியோ ரெக்கோடிங் சேவை

உங்கள் வீடியோ றெக்கோடிங் தேவைகள் எதுவானாலும் குறித்த
நேரத்தில் பதிவுசெய்து பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்
உங்கள் தேவை!!! அதுவே எமது சேவை!!!

புதுவருட வாழ்த்துக்கள்

உறுதியும் உத்தரவாதமும் உடைய
அழகு வனிதையரை அழகுபடுத்தும்

கோல்டன் பிறு

வாங்கிப் பயனடையுங்கள்
எங்கும் கிடைக்கும்.

எமது வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு
நல்வாழ்த்துக்களை தெரிவிக்கும்




வாடிக்கையாளர்கள்
அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்

எமது மங்களகரமான
புதுவருட வாழ்த்துக்கள்!

சிவகுமார் ஸ்ரோர்ஸ்
282, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

# மக்கள் வங்கியின்

## புதுவருட வாழ்த்துக்கள்



புத்தாண்டைக் கொண்டாடும் எமது வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் ஆதரவாளர்களுக்கும் மக்கள் வங்கி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

**மக்கள் வங்கியே**

**நம் தோழன்**

பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

மக்கள் வங்கி

(எ 687)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,

ஆதரவாளர்களுக்கு

எமது பிரமோதூத வருட வாழ்த்துக்களைத்

தெரிவித்துக்கொள்கிறோம்!

சிற்றி

ஏஜன்சி

154, ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்


## நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

திரு. த. சத்தியதாஸன் எழுதிய பிரமோதூத வருஷ ராசிப்பலன்களும் ஸ்ரீரமண பகவான் அருளிய தத்துவ ஞான விளக்கமும் அடங்கிய நூல் வெளியீட்டுவிழா இன்று காலை கீரிமலை யோகசுவாமிகள் மகளிர் தவநிலையத்தில் நடைபெறவிருக்கிறது. [153)

## மருதடி

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சித்தால் மூலாதாரத்தில் விளங்கும் விநாயகர் ஆறு ஆதாரங்களில் நம்மைப் பொருந்தச் செய்வார். அத்துடன் வன்னிப்பத்திரம் விநாயகருக்கு உகந்தது. எம்பெருமானுகிய மருதடி விநாயகர் மூலஸ்தானத்திலே ஆகுவாகனராகக் காட்சி தருகிறார். இந்த ஊர் மக்களையல்ல; அயலூர் அதற்கப்பாலுள்ள ஊர் மக்களையும் தன்பால் கவர்ந்து ஈர்க்கின்றார். கவலையுடன் வரும் மக்களை ஆனந்தபுவனத்திலிருந்துகொண்டு ஆனந்தனுக்குகிறார்.

இத்தனை சிறப்பம்சங்களையும் தன்னகத்தே கொண்டு மருதமர நிழலிலே அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சித்திவிநாயகர் ஆலயத்தில் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பெற்ற பஞ்சமுக விநாயகப் பெருமான் தனது ஈசானம், தற்புருஷம், அகோரகிருதம், வாமதேவம், சத்தியோயாதம் ஆகிய ஐந்து முகங்களினுலும் இன்று நான்காவது தடவையாக அருள்பொழிய வீதிவலம் வருகின்றார். நாணதீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் நிறைவுறும் பல பாகங்களிலிருந்து பல அடியார்கள் இவ்விரதோற்சவத்தில் பங்குபற்றி வினைகளை வேரோடறுக்கும் விநாயகப் பெருமானை வழிபடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் தமது மானியம்பதி மருதடி விநாயகர் பதிகத்தில் ''வந்தவினையோடிடும் (விக்கினம் விடும்) வருகின்ற வினைகள் விலகும்'' எனப் பாடியுள்ளார். நாமும் எமக்குள்ள வினைகளைக் களையும்படி கூறி இத்தினத்தில் அவனருளாலே அவன் தாள் வணங்கி, அவன் புகழ்பாடி ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக.


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது இனிய

புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இனிப்பு வகைகள்
சொக்லேற் வகைகள்
பிஸ்கற் வகைகள்

மற்றும் நானுவித பொருட்களின்
மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்

அனஸ் சுவீட் ஹவுஸ்

63, ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்

எமது புதுவருட

வாழ்த்துக்கள்!

★ தொலைக்காட்சிப் பெட்டிகள் (T. V.)
★ வானொலிப் பெட்டிகள் (Radio)
★ ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள்
★ விளையாட்டுப் பொருட்கள்
★ அலங்காரப் பொருட்கள்
★ மின்சார உபகரணங்கள்

மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வாலாம்பிகா

ரேடர்ஸ்

2 1/5, ஸ்ரானலி வீதி, யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்கள்! அன்பர்கள்!! ஆதரவாளர்கள்!!! அனைவருக்கும்

எமது இதயம் கனிந்த

புத்தாண்டு வாழ்த்துக்கள்!

கடந்த 40 ஆண்டுகளாக வடபகுதி மக்களுக்கு

மின் உபகரணங்களை வழங்கியதில் பெரும் மகிழ்வடைகின்றோம்.

இச்சேவை தொடர்ந்தும் நீடிக்க உங்கள் ஆதரவை நாடுகின்றோம்.

உங்கள் அன்றாட நீர்ப்பாவனைக்கு



"நியூரோன்" பம்புகளை ஒருவருட உத்தரவாதத்துடன்

எங்களிடமும் - எங்களின் பிரதி விற்பனையாளரிடமும்

பெற்றுக்கொள்ளலாம்.

★ நியூரோன் எலெக்ரிக்கல்ஸ் ★

141, 143 - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## "பனைவளம் பெருக்கி பயன்பல காண்போம்"

# பனை அபிவிருத்திச்சபையின்

## மற்றுமொரு அறிமுகம்!

# பாம்போஷா

உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியமான

வாழ்க்கைக்கு உகந்த உணவு இது!



உலகில் தமிழர் வாழும் நாடெங்கிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள

சத்துமிக்க உணவுதான்

## பாம்போஷா! பாம்போஷா! பாம்போஷா!

## பாம்போஷா வாங்கிப் பயன்பெறுங்கள்

# பனை அபிருத்திச் சபை

## புதுவருட வாழ்த்துக்கள்!

விரைவில் யாழ். வருகிறது

## ‘டைனமிக்’ - 2

இழந்த சக்தியை மீண்டும் பெறவல்ல

ஒரு இணையற்ற அற்புத பானம்!

# DYNAMIC - 2

**(Glucose with Vitamin C)**

விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டுக்கான சக்தியைத் தேக்கி வைக்கிறது. வளர்ந்தோருக்கு அன்றைய கடுமையான உழைப்பின் களைப்பை அகற்றுகிறது. நோயுற்றோருக்கு சக்தியை மீட்டுக் கொடுக்கிறது. சிறுவர்களுக்கு புத்துணர்வு ஊட்டுகிறது.

## டைனமிக் - 2

**கறுவாக்கேணி**

## வாழைச்சேனை

---

அனைவருக்கும்

## எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்

சகலவிதமான

அச்சுத் தேவைகளுக்கும்

நம்பிக்கையான ஒரு நிறுவனம்

# வத்தளை பிறின்ரேஸ்

## WATTALA PRINTERS

( Printers, Stationers & Book - Binders )

74/2, Muthuwella Mawatha,

COLOMBO-15.

Telephone: 523108

**Office: 13, Kosala Lane,**

**Colombo-11.**

**Telephone: 23226**

---

## புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

**உங்களின் வெளிநாட்டு பிரயாணம் பற்றி கவலைவேண்டாம்!**

உலகின் எந்தநாடு என்றாலும் எவ்விதச் சிரமமுமின்றி
டிக்கட் - விஸா சம்பந்தமான உங்களின்
பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ள

எங்களை நாடுங்கள்

# UNITRADES TRAVELS & TOURS LTD.

**(HIRDARAMANI BUILDING - FIRST FLOOR)**

63 1/8, CHATHAM STREET, COLOMBO - 1.

**Telephone:** 26826, 434409 **Cable:** UNITRAD

- டிக்கட் ● விஸா
- கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் சென்றுவர
- ஹோட்டல் - தங்குமிட வசதிகள்
- உல்லாசப் பிரயாணம்


## எல்லாமே எங்களின் சேவைகள்தான்!

உங்களின் வெளிநாட்டுப் பிரயாணத்துக்கு எங்களை நாடுங்கள்.
எங்களின் நற்சேவை உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்.

**நம்பிக்கை - நாணயம் அதுவே எமது முத்திரை!**

மக்கள் அனைவரும்
அமைதியும் சுபீட்சமும் பெற்று
வாழ்க என
வாழ்த்துகின்றோம்!

எம். டீ.
என்ரபிறைசஸ்,
அச்சுவேலி.



"கூட்டுறவே நாட்டுயர்வு"

கூட்டுறவாளர்கள்
அங்கத்தவர்கள்
வாடிக்கையாளர்கள்
அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்

எமது இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

V

நல்லூர்
ப. நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்


## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்திய சாலையில் கடந்த நான்கு வருடங்களாக மலேரியா தடுப்பு இயக்க வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. எஸ். இராமநாதன் வேரவில் அரசினர் வைத்திய சாலைக்கு எதிர்வரும் 16ம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0

(பண்டத்தரிப்பு)

யாழ். மலேரியா தடுப்பு இயக்கப் பிரிவில் கடமையாற்றும் ஆறு வெளிக்கள உதவியாளர்கள் இம்மாதம் 16ம் திகதி தொடக்கம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். (72)

---

சட்டவிரோத

## மின்இணைப்பு துண்டிப்பு

(நாவற்குழி)

கைதடிப்பகுதியில் சட்ட விரோத மின் இணைப்புகள் சாவகச்சேரி மின்சாரசபை ஊழியர்களினால் அகற்றப்பட்டன.

நீண்டகாலமாக பல வீடுகளில் பொருத்தப்பட்டுருந்த சட்டவிரோத மின்பாவனை வயர்கள் அகற்றப்பட்டன. (107)

---

எரிபொருள்

## விநியோகம் நடைபெறவில்லை

(நாவற்குழி)

கடந்த இரண்டு நாட்களாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப் படாததால் கைதடிப்பகுதியில் தனியார் விற்பனையாளர்களினால் ஒரு லீட்டர் பெற்றோல் 38 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டது. (107)

---

## இராசி பலன்

**14- 04- 1990**

**சனிக்கிழமை**

மேடம்:- போசன சுகக் குறைவு, அலங்காரம் ஏமாற்றம், பெரியோர் உதவி.

இடபம்:- மறதி ஏற்படல், தொழில் திருத்தி இலாபம், உதவியின்மை.

மிதுனம்: அற்பலாபம், புதியவர் ஆலோசனை வீண் கலகம், மறதி ஏற்படல்.

கடகம்:- தொழிற்சிறப்பு பொழுது போக்கு சஞ்சலம், பயம்.

சிங்கம்: நண்பர் விரோதம், களைப்பு, வாக்குக் கலகம், வீட்டுச் செலவு.

கன்னி;- ஸ்திரீகள் உதவி லட்சுமீகரம் தருமச் செய்கை, உஷ்ணவியாதி.

துலாம்:- இனசனவிரோதம், மந்தபுத்தி. அற்பலாபம், சமாதானம்.

விருச்சிகம்:- குடும்பச் செலவு, இனசன ஆதரவு கடன்படல். விஷபீடை.

தனுசு:- வீட்டுச் செலவு, திக்குப்பலிதம், அற்பலாபம், தருமசிந்தை.

மகரம்:- அற்பலாபம் பிரயாசைமிகுதி, யாத்திரை இனசனக் கொண்டாட்டம்.

கும்பம்: ஆடம்பரச் செலவு மனப்பயம், இனசன உதவிகள், கவலையீனம்.

மீனம்: வீட்டுச்சுகம், காரிய சித்தி, பணவரவு தரும சிந்தை.

இ. மகாதேவா


அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது புதுவருட
வாழ்த்துக்கள்!

யாழ்நகரில்
தரம்மிக்க ஜவுளி வகைகளை
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க
வருக வருக என வரவேற்கிறோம்.
முகூர்த்தப் பட்டுப் புடவைகட்கு
சிறந்த ஸ்தாபனம்
கணேசன்
ஸ்ரோர்ஸ்
201, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.



கூட்டுறவாளர்கள்
அங்கத்தவர்கள்
வாடிக்கையாளர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது

புத்தாண்டு
வாழ்த்துக்கள்

()

சுன்னாகம்
பல நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
கே. கே. எஸ். வீதி
சுன்னாகம்






'சிறுகச் சேர்த்து பெருக வாழ்வீர்'

செல்லப்பிள்ளை உங்களுக்கு கைவிஷேசமாக
வெள்ளிப் பணம் அள்ளித்தருவார்கள்
சுட்டிப் பயலாக இருந்துவிடாமல்
கெட்டித்தனமாக உண்டியலில் சேர்த்துவிடுவீர்கள்
உண்டியலும் நிரம்பிவிட்டால்
வங்கியிலே ஒரு கணக்கு
உங்கள் பெயரிலே
ஒளிமயமான எதிர்காலத்திற்கு
இன்றே சேமியுங்கள்.

அழகிய உண்டியல் ஒன்றை
உங்களுடையதாக்கிட
மில்க்வைற் மேலுறையிலிருந்து
100 திருக்குறள்
நேரில் கொண்டு வாருங்கள்.

மில்க் வைற்
யாழ்ப்பாணம்.

# "அன்னைபூபதியின் தியாகம் எங்கள் மனதில் பதிந்துள்ளது"

## — பாப்பா

(நாவற்குழி)

''அன்னை பூபதியின் உடல் மட்டும்தான் எம்மைவிட்டுப் பிரிந்ததேயொழிய அவர் தமிழ் மக்களுக்காகச் செய்த தியாகம் எங்கள் மனதில் நிரந்தரமாகப் பதிந்துள்ளது''

இவ்வாறு அன்னை பூபதியின் நினைவாக நாவற்குழி சந்தியில் நடைபெற்ற ஒருநாள் உண்ணாவிரதத்தை முடித்துவைத்துப் பேசிய தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா கூறினர்.

கைதடி, நாவற்குழிப் பகுதி அரசியல் பொறுப்பபளர் அப்பனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த சுழற்சிமுறை உண்ணாவிரதத்தில் பாப்பா தொடர்ந்து பேசுகையில், ''மக்கள் ஒற்றுமையாக இருந்தால்தான் எந்த இலட்சியத்தையும் வென்றெடுக்க முடியும். ஒற்றுமையும், தியாகமும் மிகவும் முக்கியமானதாகும். இதற்கு அன்னை பூபதியின் வரலாறு எமக்கெல்லாம் வழி காட்டியாகும்.

இக்கூட்டத்தில் கைதடி, நாவற்குழி அரசியல் பொறுப்பாளர் அப்பன் பேசுகையில், ''போராட்டம் என்பது ஆயுதத்திஞல்தான் மட்டும் செய்வதல்ல. அகிம்சை வழியிலும் போராட முடியும் என்பதை உலகிற்கு உணர்த்தியவர் அன்னை பூபதியாகும். இளைஞர்கள் மத்தியிலும் யுவதிகள் மத்தியிலும் தியாக மனப்பான்மை மிகவும் அவசியமாகும்'' என்றூர்.

கைதடி இணக்கசபைத்தலைவர் திரு. ஆறுமுகம் கந்தையா உட்பட பலர் உரையாற்றினூர்கள். (107)

## ஆலோசனை சபைக் கூட்டம்

(நாவற்குழி)

நாவற்குழி பொதுநூலக வாசகர் வட்ட ஆலோசனைச் சபைக் கூட்டம் நாளை 15ந் திகதி பிற்பகல் சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உபஅலுவலகத்தில் அமைந்துள்ள நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (107)


எமது வாடிக்கையாளர்கள்
அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் பிரமோதூத
வருட வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்ருேம்.

சத்யா காமன்ஸ்
SATHYA GARMENTS
தெல்லிப்பழை.



வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்

★ இப்புத்தாண்டில் ★

அமைதியும் சுபிட்சமும் நிலவ
பிரார்த்திக்கும்

★★★

க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்

5(76), பெரியகடை, யாழ்ப்பாணம்.


## படித்த வாலிபர் தினம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முத்திரை சேகரிப்போர் சங்கத்தின் ஆதரவில் மே மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் ''படித்த வாலிபர் தினம்'' கொண்டாடப்படவிருக்கிறது (ம)

## இன்று மிருசுவிலில் எழுச்சி விழா

(தென்மராட்சி)

தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் எழுச்சி விழாஇன்று காலை 11 மணியளவில் மிருசுவிலில் நடைபெறும்.

## தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் விளையாட்டுக் கழகங்களுக் கிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற தாச்சிச் சுற்றுப் போட்டியில் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண விளையாட்டுக் கழகம் முதலாவது இடத்தைப் பெற்று சாம்பியன் பரிசைப் பெற்றுக்கொண்டது. (56)


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது

புத்தாண்டு வாழ்த்துக்கள்

O பாடசாலை உபகரணங்கள்,
O காகிதாதிகள்

மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்

ஆசிர்வாதம்
ஸ்ரோர்ஸ்

61, பெரியகடை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



"கூட்டுறவே நாட்டுயர்வு"

கூட்டுறவாளர்கள்
அங்கத்தவர்கள்
வாடிக்கையாளர்கள்
அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்;

எமது மங்களகரமான

புத்தாண்டு
வாழ்த்துக்கள்

தெல்லிப்பழை

பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
தெல்லிப்பழை



'ஈழநாடு'

வார மலர்

15 - 04 - 1990

- யாககுண்டம் (தொடர் நவீனம்)
- அபிராமி ஒரு தொடர்கதை (சிறுகதை)
- சித்திரைப்பெண்ணே (கவிதை)
- இலங்கையிலும் 'எயிட்ஸ்' அபாயம் (மருத்துவம்)
- வீட்டுத் தோட்டம் (விவசாயம்)
- வெற்றிலைக்கு முக்கிய இடம்
- தமிழ் இலக்கியசுவை
- மாணவர் மன்றம்
- மங்கையர் மஞ்சரி
- வாரபலன்
- நகைச்சுவை

மற்றும்

வழக்கமான அம்சங்கள்

பக்கங்கள் - 12

விலை ரூபா 3/-



வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது

புத்தாண்டு வாழ்த்துக்கள்

O சீமெந்து
O லங்கா பிளேய்ன் கம்பி
O லங்கா டோர் ஸ்டீல்
O லங்கா றிப் ஸ்டீல்
O பட்டம், கேடர்,
O இரும்புத் தகரம்
O கல்வனைஸ்ட் தகரம்

மற்றும் சகல விதமான கட்டிடப் பொருட்கள்
அனைத்துக்கும்




தீன்சன்ஸ்

66, மானிப்பாய் வீதி

யாழ்ப்பாணம்.

யாழ். மாநர எல்லைக்குள் 50பக்கட் சீமெந்துக்கு மேல்
கொள்வனவு செய்பவர்களுக்கு
இலவசமாக விநியோகம் செய்யப்படும்.

புத்தாண்டில் ஒளியூட்டும் தேசிய தீபம்போல் புதுவாழ்வு தர உங்களை அழைக்கின்றது

# இலங்கை வங்கி-நம் தேசிய வங்கி



சோலைக்குயில் கூவுமொலி காதில் விழ
வாலைக் குமரியர் ஊஞ்சலாடி அகமகிழ
பட்டாசும் வாணவேடிக்கைகளும் கலகலப்பூட்ட மற்றுமொரு
சித்திரைப் புத்தாண்டு மலர்ந்துள்ளது.

தேசிய முன்னேற்றத்துக்கு 'ஒளியூட்டி
வழிகாட்டும் தீபமான இலங்கை வங்கி
இந்த மகிழ்ச்சிகரமான வேளையை உங்களுடன்
பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகின்றது.

இன்று சித்திரை மாதம் 14-ம் திகதி சனிக்கிழமை புதுவருடத்தை முன்னிட்டு எமது வடபிராந்திய வங்கிக்கிளைகள்

## மு. பகல் 10 மணி தொடக்கம் ந. பகல் 12 மணி வரை

சுபமுகூர்த்த பரிமாறல்களுக்காகத் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இன்றையதினம் சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு விசேட சலுகையாக இந்தச் சான்றிதழ்களுக்கு அதிகரித்த வட்டி வழங்கப்படும்.

## வங்கி வழங்கும் விசேடப் புத்தாண்டுப் பரிசுகள்

★ கொள்வனவு செய்யப்படும் 6 மாத, 12 மாத முதிர்ச்சியுடைய சேமிப்புச் சான்றிதழ்களுக்கு முறையே 15.05 வீதம் 16.28 வீதம் வருடாந்த வட்டியாக வழங்கப்படும்

★ சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்வோருக்கு வங்கியின் சார்பாக கைவிசேஷம் வழங்கப்படும்.

### சேமிப்புச் சான்றிதழ்களின் கொள்வனவு விபரங்கள்:

| சான்றிதழின் பெறுமதி | | நீங்கள் செலுத்தவேண்டிய தொகை (6 மாதமாயின்) | நீங்கள் செலுத்தவேண்டிய தொகை (1 வருடமாயின்) |
|---|---|---|---|
| ரூபா | 200/- | 186/- | 172/- |
| ரூபா | 500/- | 465/- | 430/- |
| ரூபா | 1000/- | 930/- | 860/- |
| ரூபா | 5,000/- | 4,650/- | 4,300/- |
| ரூபா | 10,000/- | 9,300/- | 8600/- |
| ரூபா | 25,000/- | 23,250/- | 21,500/- |

சேமிப்புச் சான்றிதழ்களுக்கான அதிகரித்த வட்டிவீதம் 4-5-1990 வரை அமுலில் இருக்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மலரும் புத்தாண்டில் நாட்டிலே அமைதியும் சமாதானமும் நிலைபெற்றுச் சுபீட்சம் பெருக வேண்டுமெனவும், இல்லம் தோறும் மகிழ்ச்சி பொங்கவேண்டுமெனவும் இலங்கை வங்கி வாழ்த்துகின்றது.

# இலங்கை வங்கி - தேசத்தின் வங்கியாளர்

## அன்னை பூபதி நினைவாக

# மட்டு.மாவட்டத்தில் 150 அடையாளஉண்ணுவிரதங்கள்

## சிரமதானத்தில் 50,000 மக்கள்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்னை பூபதி நினைவு தொடர்பான வைபவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மாவட்டத்தின் பல பாகங்களிலும் இதுவரை 150 அடையாள உண்ணு விரதங்கள் நடைபெற்றுள்ளன. அன்னை பூபதி நினைவாக தொடர்ந்து நடைபெற்றுவரும் உண்ணு விரதம், சிரமதானம் போன்றவற்றில் இதுவரை ஐம்பதினுயிரத்துக்கு மேற்பட்ட பொது மக்கள் கலந்துகொண்டுள்ளதாக அன்னையர் முன்னணிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்,

கடந்தவாரம் மட்டக்களப்பு மாநகரசபை ஊழியர்களால் ஒரு நாள் அடையாள உண்ணு விரதம் அனுஷ்டிக்கப்பட்டது,

சந்திவெளி,கோரகல்விமடு, மண்டூர், பழுகாமம், வெல்லாவெளி, புணணை, புளியடிக்குடா, இருதயபுரம், மஞ்சத்தொடுவாய் உட்பட 35 கிராமங்களில் அடையாள உண்ணு விரதம் நடைபெற்றுள்ளன.

உண்ணுவிரதத்தை ஆரம்பித்து வைத்தல், முடித்து வைத்தல் ஆகிய வைபவங்களில் விடுதலைப் புலிகளின் உள்ளூர்ப் பிரமுகர்கள் கலந்து கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் 16ம் 17ம் 18ம் திகதிகளில் சர்வோதயம்சகல சமித்திகளுடனும் இணைந்து அன்னை பூபதி நினைவு தொடர்பாக பல்வேறு வைபவங்களை ஒழுங்கு செய்துள்ளது.

## காட்டில் சடலம்

(மாங்குளம்)

அக்கராயன் அம்பலப்பெருமாள் காட்டுக்குள் மரத்தில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அவ்வூரை சேர்ந்தகந்தையா சண்முகம் (வயது 52) வீட்டில் ஏற்பட்ட தகராறையடுத்து இம்மாதம் 2ம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டார் என்றும் பின்பு காட்டில் சுருக்கிட்டு தொங்கிய நிலையில் இறந்து கிடக்க காணப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

இவரது மரணம் தற்கொலையென தீர்ப்பு வழங்கப்பட்டது. (150)

## நிவாரண

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யர் ஆலயம், றக்கிள மேசன் சனசமூக நிலையத்தினர் இணைந்து நடாத்திய கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினுர்.

உலக தரிசன வடமாகாணப் திட்டப் பொறுப்பாளர் திரு. பொன் குணரத்தினம் உரையாற்றும்போது கூறியதாவது 'வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு அவர்களின் பொருளாதார மேம்பாட்டை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு சுழற்சி முறையிலான கடன் வசதிகளையும் பல கிராமங்களில் செய்து வருகின்ரேம். இவ்வண்ணம் பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனங்களுக்கு மானியமாகவே எம்மால் கடன் வழங்கப்படுகின்றது.

## யானையுடன் மோதியலொறி

(மாங்குளம்)

யானையுடன் மோதிய லொறி குடைசாய்ந்தது. இச்சம்பவம் பனிக்கன்குளம் புத்துவெட்டுவானுக்கிடையில் அண்மையில் நடைபெற்றது.

லொறி சென்று கொண்டிருந்த வேளையில் திடீரென குறுக்கிட்ட யானைக்கூட்டத்தில் லொறி எதிர்பாராமல் மோதியதால் குடை சாய்ந்தது. சாரதியும் கிளீனரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினுர். (150)

## லெபனுனில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து ஆயிரக்கணக்காஞேர் லெபனுன் சென்றுள்ளனர். இவர்களில் பெருமளவினர் பெண்கள். அண்மைக்காலங்களில் இடம்பெற்ற யுத்தநடவடிக்கைகளிலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

தற்போது அங்கு தொழில்களைப் பெற்றுள்ள ஆயிரக்கணக்காஞேர்சொல்லொணுத் துயரங்களை அனுபவித்து வருவதாகவும் இவர்களை மீட்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் அங்குள்ளவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (சி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் 71வதுசுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா இன்று மாலை வெகு சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. இக்கொண்டாட்டத்தில் சிறப்புரைகள், கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுடன் அன்னை பூபதிக்கும், மறைந்த விடுதலைப் போராளிகளுக்கும் அஞ்சலி நிகழ்ச்சியும் இடம்பெறும்.

## பலத்தகாயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் மிதிவெடியொன்று வெடித்ததால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலத்த காயமடைந்தார்.

## இந்திய-பாக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் எல்லையில் மோதல் ஏற்படாதவாறு அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# முதல்வர் கருணநிதியின் கோரிக்கை நிராகரிப்பு

(புதுடில்லி)

வடக்கு-கிழக்கு மாகாண சபையை கலைத்து புதிய தேர்தலை சந்திக்குமாறு தமிழக முதல்வர் திரு. மு. கருணுநிதி விடுத்த கோரிக்கையை ஈ. பி. ஆர். எல். எவ். செயலதிபர் திரு. கே. பத்மநாபா நிராகரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் பத்திரிகைகளுக்கு பேட்டியொன்றையும் அளித்துள்ளார். அப்பேட்டியில்; நாம் மக்களின் ஆதரவுடனேயே ஆட்சியமைத்துள்ளோம். இதனை கலைத்து புதிய தேர்தலை சந்திக்குமாறு திரு. கருணுநிதி கோருகிறுர் அதற்கு நாம் தயாரில்லை இதற்காக நாம் தொடர்ந்து போராடுவோம்.

இலங்கை அரசே எமது முதல் எதிரி நாம் இந்தியாவின் ஆதரவுடனேயே எமது போராட்டத்தை மீண்டும நடாத்துவோம். இலங்கை அரசு தற்போது இஸ்ரேல், தென்ஆபிரிக்கா, பிரிட்டனின்

## பத்மநாபா பேட்டி

உதவிகளை பெற்றுவருகிறது.

நாம் முன்வைத்த 19 அம்சக்கோரிக்கைகளின் நிபந்தனையில் இலங்கை அரசு எம்முடன் பேச்சுக்கள் நடாத்தவேண்டும் இல்லாவிடில் நாம் மீண்டும் ஆயுத போராட்டத்தை ஆரம்பிப்போம் என்றும் கூறினுர். (சி)

## ஜனதிபதியை சந்திக்க

1(ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள புத்தாண்டுத்தினத்தில் ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசாவிடம் கையளிப்பதற்காக கடந்த 9ம் திகதி பளை மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து திரு. எம் புவனேந்திரன் தலைமையில் 9 பேர் கொண்ட சாரணர் தூதுக்குழு கொழும்புக்கு சைக்கிளில் புறப்பட்டது.

இக்குழுவினர் நேற்று முன்தினம் மாலை நீர்கொழும்பை அண்மித்துக் கொண்டிருக்கும் போது பின்புறமாக வேகமாக வந்த லொறி ஒன்று எதிர்பாராத விதமாக ஆசிரியர் திரு. நாகமுத்து நற்குணத்தை மோதியதால் அவர் ஸ்தலத்திலேயே தலைநசுங்கிய நிலையில் மரணமானுர். இதனல் தூதுக்குழுவினர் தமது பயணத்தை இடைநிறுத்தி பளைக்குத் திரும்பினுர்கள்.

விபத்தில் இறந்த ஆசிரியரான திரு. நாகமுத்து நற்குணத்தின் சடலம் அவரின் சொந்த ஊரான புலோப்பளை கிழக்குக்கு நேற்று கொண்டு வரப்பட்டது. (வி)

## பிரபாகரன் - ஹமீத்

திரு. பானு யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு.ஸ்ரான்லிடொமினிக் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்

இச்சந்திப்பின் போது வடக்கு- கிழக்கு மாகாண சட்டம், ஒழுங்கு பிரச்சினை பற்றி பேசப்பட்டது. வடமராட்சியில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு மூடப்பட்ட பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு இணக்கம் காணப்பட்டதாகவும் தெரியவருகிறது. தமிழீழ புனருத்தாரண புனர்நிர்மான அபிவிருத்தி வேலைத் திட்டம் பற்றியும் அவை சரியான முறையில் துரிதமாக செயற்படுத்த வேண்டிய தேவை பற்றியும் பேசப்பட்டது.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்சினை சம்பந்தமாகவும் பேசப்பட்டதாக தெரியவருகிறது.

இப்பேச்சுவார்த்தை சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. அமைச்சர் ஜனப். ஏ. ஸி. எஸ். ஹமீத் பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு நண்பகல் கொழும்பு திரும்பினுர்.

### அரசு அறிக்கை

''இனப் பிரச்னைக்கு நிலையான தீர்வொன்றைக் காண்பதற்கும், நாட்டின் சகல பகுதிகளிலும் மீண்டும் சமாதானத்தையும், சகஜநிலையையும் ஏற்படுத்தவும் ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசா எடுத்துவரும் முயற்சிகளுக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கும்''.

வடக்கு-கிழக்கு மாகாண சமாதான சபையின் தலைவர் ஜனப் ஏ. ஸி. எஸ். ஹமீத்துக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும் இடையில் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போது திரு. வே. பிரபாகரன் மேற்கண்ட உறுதிமொழியை வழங்கினுர் என அரசு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது: இப்பேச்சுவார்த்தையின் போது வடக்கு-கிழக்குப் பகுதியிலுள்ள முஸ்லிம் மக்களின் அரசியல் எதிர்காலம் குறித்தும் ஆராயப்பட்டது. முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குச் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதுஎன முடிவு எடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு,புனர்நிர்மாணத் திட்டங்களில் விடுதலைப் புலிகள் இயக்கம் அதிக அக்கறைகொண்டுள்ளது என்றும், இவ்அபிவிருத்தித் திட்டங்கள் துரிதகதியில் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் இப்பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்தப்பட்டது.

இத்திட்டங்களைப் பூரணமாக நிறைவேற்றுவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் சகல ஒத்துழைப்பையும் வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (152-153)

## ஜே. வி. பி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

அண்மைக் காலமாக இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களில் சுமார் 3 கோடி ரூபா வரை கொள்ளையிடப்பட்டும், இராணுவத்துடன் தொடர்புடையவர்களென சுமார் 50 பேருக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவங்களையடுத்து தென்பகுதியில் இராணுவத்தினரின் நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளில் 30 பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் சில பகுதிகளிலிருந்து முக்கிய தஸ்தாவேஜுகளும் துண்டுப் பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (சி)

## வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வார முற்பகுதியில் ஜனதிபதி திரு பிரேமதாஸாவுடனுன சந்திப்பில், வடக்கு கிழக்கு மாகாண புனரமைப்பை துரிதமாக மேற்கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் கோரியிருந்தும் அதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனதிபதி உறுதியளித்திருந்தும் குறிப்பிடத்தக்கது. (து)


# அமைதி நிலவ

## புத்தாண்டு வாழ்த்து!

மலரும் புத்தாண்டில் நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைபெற்றுச் சுபீட்சம் பெருகவேண்டுமென இலங்கை வங்கி முகாமைத்துவம் நம்பிக்கையோடு வாழ்த்துகின்றது.

எம் மக்களும், பொதுசனத் தொடர்பு சாதனங்களும் அளித்த பேராதரவு காரணமாகவே இலங்கை வங்கி ஒரு இக்கட்டான காலகட்டத்திலும் பணக்கொடுக்கல் வாங்கல் உட்படப் பல சேவைகளை இப்பகுதி மக்களுக்கு வழங்க முடிந்தது.

அதேவேளை வங்கி முகாமைத்துவம் இச்சேவைகளைத் தடங்கலின்றி வழங்க எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியிலும் பாடுபட்ட தனது ஊழியர்களுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றது.

எதிர்வரும் புத்தாண்டில் எல்லா வங்கிக் கிளைகளிலும் ஒரு பூரணத்துவமானதும் திருப்திசரமானதுமான சேவையை நம் மக்களுக்குக் குறைவில்லாமல் வழங்க முடியுமென உறுதி கூறுகின்றேன்.

திருமதி ரோஹிணி நாணயக்காரா
பொது முகாமையாளர்
இலங்கை வங்கி


## மரண அறிவித்தல்

### பகவதி சின்னத்தம்பி

அச்சுவேலி தெற்கினைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி பகவதி சின்னத்தம்பி 13-4-90ல் காலமானுர்.

அன்னுர் சின்னத்தம்பி (இளைப்பாறிய மலேசிய பிரதேச புகையிரதக் கட்டுப்பாட்டாளர், மலேசியா) அவர்களின் அன்பு மனைவியும், மகேந்திரன் (வழக்கறிஞர், கொழும்பு), மகேஸ்வரி ஆகியோரின் தாயாரும், பேராசிரியர் பாலகிருஷ்ணன் (யாழ் பல்கலைக்கழகம்), அமிர்தராணி (புள்ளிவிபரத் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், இந்திரன், பிரதாபன், பிரசனுன், பிரமிளா, வசந்தன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் அச்சுவேலி இல்லத்தில் ஞாயிறு 15-04-90 பத்து மணியளவில் நடைபெறும்.

உற்றுர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு.
அச்சுவேலி.

தகவல்:
சி. மகேந்திரன்

(சி-3754)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.